# மேட்டுப்பாளையம் நகராட்சி

08.01.2019ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி (எண்.34) மாநகராட்சி, நகராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரமான தானியங்கி குடிநீர் மையங்கள் அமைக்கும் பணிக்கு 03.01.2019ல் தேதியன்று 16 இடங்களுக்கு தனியார் நிறுவனம் மூலம் விருப்பம் தெரிவித்தல் (Expression of interest) ஒப்பந்தப்புள்ளி ஒன்று மட்டும் நேரிடையாக வரப்பெற்றுள்ளது.<br>Appex Associates<br>73/20B Veerapalayam perivu<br>Nasiyannur Road,<br>Erode.<br>மேற்காணும் வரப்பெற்ற நிறுவனங்களின் உறைகளில் தொழிற்நுட்ப தகுதி உறையினை அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு பிரித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தொழில்நுட்ப தகுதி பெற்றதால் அன்னாரது விலைப்புள்ளி உறையினை 07.01.2019ம் தேதியன்று பிரிக்க ஒப்பந்ததாரர்க்கு கடிதம் அனுப்பி வைத்து அதன்படி காலை 11.00 மணிக்கு ஒப்பந்ததாரர் முன்னிலையில் Price bid பிரிக்கப்பட்டது.<br><br>இதில் நகராட்சி ஆணையரது ந.க.எண்.17018/18 குவி 1 நாள்.23.08.2018 கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு Appex Associates Erode நிறுவனத்தாரின் விலைப்புள்ளி 20 லிட்டருக்கு (இருபது லிட்டருக்கு) ரூ. 7.00 ரூபாய் என்ற விகிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளதால் இப்பணியானது பொதுமக்களுக்கு அத்தியாவசியமான உயர்தர குடிநீர் சுத்திகரிப்பு செய்து வழங்கும் பணியாதலாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் மேற்குறிப்பிட்ட கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.3546/2018/இ2)<br>**தீர்மானம் எண்:** 162<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.27ல் நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர்லால் நேரு பேருந்து நிலையம் செயல்படுகின்றது. இதற்கு மூன்று ஆண்டுக்கு ஒருமுறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் புதுப்பித்து அனுமதி பெற வேண்டும். இதன் பொருட்டு தற்பொழுது நகராட்சி பேருந்து நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு மேற்கூரை சீரமைத்தல் பணி மற்றும் பெயின்ட் அடித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு அனுமதி வழங்கப்படும் என்று வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து அறிவுறுத்தலின்படி, மேற்படி பேருந்து நிலையத்திற்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளுவதற்கு மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 163<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

| | |
|---|---|
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23ல் மகாதேவபுரம் மெயின் ரோட்டில் உள்ள மழைநீர் வடிகால் இடிந்து மழைநீர் மற்றுத் கழிவு நீர் வீட்டிற்குள் புகுந்து விடுகிறது என்று மக்கள் 04.12.2018 அன்று சாலைமறியலில் ஈடுபட்டனர். எனவே பொதுமக்களின் சுகாதார நலன் கருதி அவ்விடத்தில் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.60இலட்சம் ஆகும். எனவே, இத்தொகையினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 164<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 4. | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் நகராட்சியில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு நவீன முறையில் பராமரிக்கவும், துப்புரவு பணியாளர்களின் ஊதியத்தினை சரியாக கணக்கீடு செய்யவும் ஒவ்வொரு நகராட்சி அலுவலகத்திலும் Bio Metric Device (Face Identification) பொருத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். அதன்படி இந்நகராட்சி அலுவலகம் –1(ஒரு எண்ணிக்கை) மற்றும் துப்புரவு வார்டு டிவிசன் அலுவலகம் –5 (ஐந்து எண்ணிக்கைகள்) கொள்முதல் செய்யும் பொருட்டு , உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 165<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சி சொந்தமான சிராஜ் நகர் பகுதியில் உள்ள நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் Resource Recovery center தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மக்கும் குப்பைகள் அல்லாத குப்பைகளை (Plastic/ Recycle and Non Recyclable) ஆகியவற்றை பிரித்து Plastic Shredder, Bailing Machine மற்றும் Conveyor, Incinerator ஆகிய உபகரணங்களை கொண்டு மக்காத குப்பைகளை உரிய முறையில் மறு பயன்பாட்டிற்கு ஏற்றவாறு பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் உபகரணங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தவும் மற்றும் அருகில் உள்ள Biogas plant ற்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மதிப்பீடு ரூ.3.40/– இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 166<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

## மேட்டுப்பாளையம் நகராட்சி

21.01.2019ம் தேதி திங்கட் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

### கூட்டப் பொருள்

1. மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018–2019ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் 8வது மாநில உயர்மட்ட குழு, கூட்ட நிகழ்வுகள் நாள் 19.12.2018ல் ரூ 264.40 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி கீழ்காணும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்து உரிய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மின்சாரம் மூலம் இயங்கும் வாகனம் 15 எண்ணிக்கைகள் வாங்குதல் | 27.00 |
| 2. | 2 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட டிப்பர் வாகனம் 4 எண்ணிக்கைகள் வாங்குதல் | 22.40 |
| 3. | நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Bio Mining) சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணி செய்தல், | 215.00 |
| | மொத்தம் | 264.40 |

மேற்காணும் பணிகளுக்கான மொத்த மதிப்பீடு ரூ. 264.40 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களின் ந.க.எண் 1191/2019/பி3, நாள் 21.01.2019ல் மத்திய அரசு மானியம் 35% , மாநில அரசு மானியம் 55%, நகராட்சி பங்களிப்பு தொகை 10% என நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதனை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுறது

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 1845/ 2018/இ1)

<u>தீர்மானம்</u> : 167
அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

2. மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு 01.04.2019 தேதி முதல் (வீட்டு உபயோகம், வணிக உபயோகம், தொழிற்சாலை உபயோகம்) குடிநீர்க் கட்டணம் உயர்வு செய்து கொள்ள இந்நகர் மன்றத் தீர்மான எண் 308, நாள் 05.02.2016ல் அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி உயர்வு செய்யப்பட உள்ள குடிநீர்க் கட்டண விகிதங்களின் மீது ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் இருந்தால் அதன் விபரத்தினை 30 நாட்களுக்குள் தெரிவிக்கும்படி 20.12.2018 தேதியில் பத்திரிக்கைகளின் வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டது. உயர்வு செய்யப்பட உள்ள குடிநீர்க் கட்டணங்களின் மீது பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளும் வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : குடிநீர்க் கட்டணங்களை உயர்வு செய்வதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்
(ந.க.எண். 3014/ 2010/அ5)

<u>தீர்மானம்</u> : 168
அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 3 | நகராட்சி வார்டு எண் 18ல் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் பொது கழிப்பிடத்தினை அகற்ற கோரி ஆட்சேபனை தெரிவித்து திருமதி. டி. சுலோச்சனா க/பெ.தினகரன் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்கு Counter Filing Vakkalath தாக்கல் செய்வதற்கு ஆகும் செலவுத் தொகையினை ரூ.7500/– நகராட்சி வழக்கறிஞர் கேட்டு பட்டியல் அளித்துள்ளதால் மேற்காண் தொகையினை நகராட்சி வழக்கறிஞர்க்கு வழங்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2468/ 2012/இ1)<br><u>தீர்மானம்</u> : 169<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.4ல் சங்கர் நகர் பகுதியில் உள்ள பகவான் மகாவீர் பள்ளி தற்பொழுது தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இங்கு தமிழ் முறை கல்வி மற்றும் ஆங்கில முறை கல்வி இரண்டிலும் குழந்தைகளுக்கு கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. இதனால் மாணவர்களுக்கு கூடுதல் வகுப்பறை தேவைப்படுகிறது. மேலும் இரண்டு மொழிகளிலும் மாணவர்களுக்கு கல்வி கற்பித்தலின் மூலம் அதிக அளவில் மாணவர் சேர்க்கையும் நடைபெறுவதால் குழந்தைகளின் நலன் கருதி முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறை அமைக்க ரூ.7.50/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணியினை கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br><u>தீர்மானம்</u> : 170<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்8ல் மகாஜன பள்ளி பின்புறம் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஆணையாளர் கூடுதல் குடியிருப்பு கட்ட வேண்டியுள்ளது. எனவே கூடுதல் குடியிருப்பு கட்டிடம் கழிப்பறை வசதிகளுடன் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1845/ 2018/இ1)<br><u>தீர்மானம்</u> : 171<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 6 | இந்நகராட்சி அலுவலகத்திற்கு தர சான்று ISO Quest International Certification என்ற நிறுவனம் மூலம் கடந்தாண்டு வழங்கப்பட்டது. எனவே அச்சான்றினை மீண்டும் இந்தாண்டிற்கு புதுப்பித்து தருவதற்கு மேற்கண்ட நிறுவனம் தொகை ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்குமாறு கடிதம் அளித்துள்ளார்கள். மேற்படி தொகையினை Quest International Certification நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 50/ 2019/இ1)<br><u>தீர்மானம்</u> : 172<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

| | |
|---|---|
| 7 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் பணிகள் அங்கன்வாடி மையங்களை மறு சீரமைத்தலுக்கு விதி 110 கீழ் 13.06.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவிப்பு மையத்திற்கு ரூ.2,00,000/— ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி அங்கன்வாடி மையத்திற்கு மேற்கூரை மாற்றி அமைத்தல் பழுதடைந்த சுவர்களை புதுப்பிக்கவும் மற்றும் மராமத்து பணிகளை செய்வதற்கு ரூ.3.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒதுக்கப்பட்ட மானியத் தொகை ரூ.2.00 இலட்சம் போக மீதமுள்ள 1.90 இலட்சத்திற்கு இந்நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 173<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 8. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.1ல் அண்ணாநகர் நகரவைப் பள்ளியில் மாணவர்கள் அதிக அளவில் கல்வி கற்கவும், மேலும் மாணவர்களின் கல்வி திறனை அதிகரிக்கும் வகையில் இங்கு நவீன வகுப்பறை (Smat Class) அமைத்து அதில் அனைத்து தொழில் நுட்பங்களையும் அறியும் விதமாக கனிணிகள் பொருத்த நவீன வகுப்பறை அமைப்பதற்கு ரூ. 5.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 174<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சி கல்வி நிதி 2018—19 மற்றும் பொதுநிதி 2018—19ன் கீழ் 09.01.2018ல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் பெறப்பட்ட பணிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து கீழ்கண்டவாறு மன்றத்ததின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.20 அண்ணா மார்கெட் பகுதியில் (சுப மருத்துவமனை பின்புறம்) நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் | ரூ. 1,30,000 | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்ப்ராக்ஸ்டக்சர்ஸ் | 2.01% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | வார்டு எண்.8 சத்திய மூர்த்தி நகர் பள்ளி வளாகத்தில் மராமத்து பணிகள் மற்றும் சிறிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் | ரூ. 3,30,000 | ஸ்ரீ சக்தி கன்ஸ்டரக்ஷன்ஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்ப்ராக்ஸ்டக்சனஸ் | 3.15% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண்.6 நேருஜி குழந்தைகள் நல மையத்தில் மராமத்து பணிகள் மற்றும் சிறிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் | ரூ. 4,60,000 | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்ப்ராக்ஸ்டக்சனஸ் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி கன்ஸ்டரக்ஷன்ஸ் | 1.76% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம்** 175

அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 10. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பழைய குடிநீர்த் திட்டத்தில் சங்கர் நகர் பம்பிங் மெயினில் நீரேற்றம் செய்யும் போது மகாதேவபுரம் சக்தி நகர் பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. தற்போது அந்த பம்பிங் மெயினில் சக்தி நகர் செல்லும் வழியில் இடையில் உள்ள பொன்னான் மூப்பன் சந்து, கிருஷ்ணசாமி லே–அவுட், மாதையன் லே அவுட், நஞ்சையன் லே அவுட் ஆகிய பகுதிகளுக்கு மணி நகர் மேல்நிலைத் தொட்டியில் இருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. ஆகையால் மேற்படி பகுதிகளுக்கு சங்கர் நகர் பம்பிங் மெயினில் இன்டர்லிங்க் செய்ய தேவையான 3'' சுலிஸ் வால்வுகள், பிளாஞ்சுகள், போல்டு நட்டுகள், பைப்நிப்பில் மற்றும் பிவிசி பைப்புகள் 'T' மற்றும் அதனுடன் சார்ந்த உபகரணங்கள் வாங்கி அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் இத்திட்டம் மூலம் பழைய குடிநீர்த் திட்டத்தில் சேர்ப்பதால் புதிய குடிநீர்த்திட்டத்தில் விநியோகம் செய்யும் காலத்தை குறைக்கவும் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கலாம்.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.<br>**தீர்மானம்** 176<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 11. | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிப் பிரிவில் சுமார் 26 கணினிகள் , 11 பிளிண்டர்கள் 3 டாட்மேட்ரிக்ஸ் பிளிண்டர்கள், 4மோடம் , 8போர்சு சுவிட்சுகள் 4, ரூட்டர் 2 , நெட் ஒர்க் கேபிள்கள், சர்வர் ஆகியவை வருடந்தோறும் ஆண்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது (A.N.C) இனிவரும் 2018–2019 ம் ஆண்டிற்கு அனைத்து உபகரணங்களையும் வருடாந்திர பராமரிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,90,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. அலுவலகத்தில் அனைத்து பணிகளும் கணினியில் இயங்குவதால் பராமரிப்பு பணி அவசியமாவதால், கனிணி அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம்** 177<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

| | |
|---|---|
| 12. | மேட்டுப்பாளைம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தேசியநெடுஞ்சாலை விரிவாக்கம் பணி நடைபெறுவதாலும், பாலங்கள் அகலப்படுத்தப்படுவதாலும் சாலைகளுக்கு இடையூறாக இருக்கும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்களை இடமாற்றம் செய்யுமாறு நெடுஞ்சாலைத்துறை உதவிப்பொறியாளர் அளித்த கடிதத்தின் பேரிலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரிசெய்யவும், பொதுக்கழிப்பிடம் மற்றும் பொதுக்குழாய்களுக்குத் தேவையான உதிரிச்சாமான்கள் விநியோகம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பம்பிங் மெயின் பகிர் மானக்குழாய் உடைப்பு சரிசெய்வது அவசியமாவதால் குடிநீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம்** 178<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 13. | இந்நகராட்சி சுகாதார ஆய்வர் அவர்களின் குறிப்பின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ள கழிப்பிடங்கள் அனைத்திலும் பெயர் மற்றும் அறிவிப்பு பதாகைகள் Swatch Bharat Missionல் இணையதளங்களில் குறிப்பிட்டுள்ளவாறு எழுத கோரியுள்ளார். இதன் அடிப்பிடையில் மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள அனைத்து கழிப்பிடங்களில் எழுத தோராய மதிப்பீடு ரூ. 85000/– க்கு மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண்.15ன் கீழ் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம்** 179<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 14. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.19ல் அண்ணா தினசரி மார்கெட் அருகிலுள்ள கட்டண கழிப்பிடத்தில் மராமத்து பணி மேற்கொள்ள ரூ. 3.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி ந.ம.எண்.150/30.10.2017 வாயிலாகப் பெறப்பட்டு, குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய திருவாளர் ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ந.ம.எண்.297/26.02.2018ன் வாயிலாக அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பணிகள் மேற்கொள்ளும் போது மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் அத்தியவசியமாக மேற்கொள்ள வேண்டியிருந்ததால் ரூ.41162/– கூடுதல் செலவினம் ஏற்பட்டது. மேற்கண்ட தொகையை ஒப்பந்தாரர் ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 180<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

| | |
|---|---|
| 15. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்டட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2018—2019ம் ஆண்டு ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர்—2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.320/— என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423, குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.02.2019 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 17,37,500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 181<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 16. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40பி—1497 தகுதி சான்றிதழ் பெற வேண்டி சில பழுது மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1.11 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம்** 182<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 17. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40பி – 1320 தகுதி சான்றிதழ் பெற வேண்டி சில பழுது மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 0.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.199/2019/ எச் 1<br>**தீர்மானம்** 183<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 18. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40—3711ல் சில பழுதுகள் ஏற்பட்டு வாகனத்தை இயக்க இல்லாத நிலையில் உள்ளது. எனவே இப்பழுதுகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.20.000/— த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.157/எச்1/2019<br>**தீர்மானம்** 184<br>அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 19. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40பி – 1483 தகுதி சான்றிதழ் பெற வேண்டி சில பழுது பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 1.05 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.63/எச்1/2019<br>**தீர்மானம் எண் :** 185<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

| | |
|---|---|
| 20. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40 – 0986ல் சில பழுதுகள் ஏற்பட்டு வாகனத்தை இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே இப்பழுதுகளை சரி செய்ய ஆகும் செலவினம் ரூ.25,000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.154/எச்1/2019<br>**தீர்மானம் எண் :** 186<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 21. | மேட்டுப்பாளையம் நகராட்சியின் 2017 – 2018ம் ஆண்டிற்குரிய வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஆண்டு கணக்குகள் தயாரித்து மற்றும் தட்டச்சு செய்து வழங்கியதற்கு வருவாய் நிதி ரூ. 7000/– குடிநீர்(ம) ஆரம்ப கல்வி நிதி ரூ. 4000/–, ரூ.11000/– திரு. பி. பொன்னுசாமி அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.115/2019/அ3<br>**தீர்மானம் எண் :** 187<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 22. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள். 30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2902/பி3/2016 நாள். 24.02.2016 மற்றும் 18.07.2016ன்படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் முதலில் பெறப்பட்ட நிர்வாக அனுமதி 24.02.2016 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. எனவே நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2016 நாள்.21.11.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு மேலும் ஒரு மாத காலத்திற்கு 28.02.2019 வரை தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.6219/எச்1/2016<br>**தீர்மானம் எண் :** 188<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 23. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.எண்.40எம் – 9694 தகுதி சான்றிதழ் பெறும் பொருட்டு சில பழுது பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோரய செலவினம் ரூ. 50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.507/எச்1/2019<br>**தீர்மானம் எண் :** 189<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

24. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40எம் – 9703 தகுதி சான்றிதழ் பெறும் பொருட்டு சில பழுது மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.508/எச்1/2019
**தீர்மானம் எண் :** 190
**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

25. மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் நடைபெற்று கொண்டு உள்ள பாதாள சாக்கடை திட்டப்பணிக்கு கூடுதல் செலவினத் தொகையான ரூ. 17.54 கோடியினை அரசாணை எண்.137 நாள். 26.12.2018 நகாரட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை (MA 2) ல் Integrated urban development Mission (IUDM) 2018–2019ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பதிவு செய்யலாம்
ந.க.எண்.1819/2016/இ1
**தீர்மானம் எண் :** 191
**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

26. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு தேவையான தளவாடப்பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு கடந்த 10.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை | 3,84,300/– |
| 2 | திரு. பிரதீப்ராஜ், மேட்டுப்பாளையம் | 4,39,700/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ்., கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3975/எச்1/2018
**தீர்மானம் எண் :** 192
**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

27. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக் கூட்டம் நாள்.07.06.2018 மற்றும் 04.09.2018. இந்நகராட்சி பல்வேறு இடங்களில் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வுக் கூட்டங்களில் உடனடியாக அமைக்குமாறு அறிவுறுத்தி உள்ளதை அடுத்து வார்டு எண் 15, பழைய சந்தைப் பேட்டை பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்கும் On site Compost முறையின் மூலம் தொட்டிகள் மற்றும் மேற்கூரை அமைக்க ரூ. 1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**தீர்மானம் எண் :** 193
**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 28. | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக் கூட்டம் நாள்.07.06.2018 மற்றும் 04.09.2018. மேட்டுப்பாளையம் நகராட்சியில் பல்வேறு இடங்களில் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வுக் கூட்டங்களில் உடனடியாக அமைக்குமாறு அறிவுறுத்தி உள்ளதை அடுத்து வார்டு எண் 17, வ.உ.சி பள்ளியில் மற்றும் அதன் அருகாமையில் உள்ள வீடுகளில் சேகரிக்கும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்கும் On site Compost முறையின் மூலம் தொட்டிகள் மற்றும் மேற்கூரை அமைக்க ரூ. 1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 194<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 29. | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டம் நாள்.07.06.2018 மற்றும் 04.09.2018 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பல்வேறு இடங்களில் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வு கூட்டங்களில் உடனடியாக அமைக்குமாறு அறிவுறுத்தி உள்ளதை அடுத்து வார்டு எண்.04, சங்கர் நகர் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளின் இருந்து உரம் தயாரிக்கும் On site Compost முறையின் மூலம் தொட்டிகள் மற்றும் மேற்கூரை அமைக்க ரூ. 1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற பொருள் ஒப்புதலுக்கு.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 195<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |